# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




மன்னா – 11 செப்டம்பர் 2021 பிரதி – 6



# ஆயர் மடல்



இறை இயேசுவில் அன்புக்குரியோரே,

இறையருளால் நாம் பெற்றிருக்கும் செப்டம்பர் மாதத்துக்காய் ஆண்டவரை துதிப்போம். நன்னடக்கை என்னும் சிந்தையோடு புதிய மாதத்தை தொடருவோம்.

மானுட வாழ்வு என்பது தினம்தோறும் ஆய்வு செய்து புதுப்பிக்கப்படவேண்டிய வாழ்வு. இதைத்தான் இம்மாத இதழின் செய்திகள் வெளிப்படுத்தி நிற்கிறது. இதை சங்கீதக்காரர் தாவீது 139-ம் சங்கீதத்தில் **“தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை ஆராய்ந்து கொள்ளும், என்னை சோதித்து என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்”.** என்று தினமும் தன்னை ஆண்டவர் நடத்தவேண்டுமே என்று கதறுகிறார். நாமும் அவ்வண்ணமே தொடருவோம்.

ஆப்கானிஸ்தான் தேசத்தில் அமைதி திரும்ப இறைவனை மன்றாடுவோம். நமது இந்திய தேசத்திலும், ஓமான் தேசத்திலும் மற்றும் பிறதேசங்களிலும் வைரஸ் தாக்கத்தின் மூன்றாம் அலை ஏற்படாது காக்கப்பட ஜெபித்துக்கொள்வோம்.

திருச்சபையில் ஆத்துமாக்கள் பெருகவும், திருச்சபை வளரவும், தொழுகைகளை கர்த்தர் ஆசீர்வதிக்கவும், தேவைகள் சந்திக்கப்படவும் அதிகமாய் ஜெபித்துக்கொள்வோம்.

நமது திருச்சபை குடும்பங்கள் பல நிலைகளிலே பாதிக்கப்படுகின்றன. பொருளாதார அளவிலும், பணி பளுக்களாலும், குடும்ப சூழலிலும், பிள்ளைகள் எதிர்கால தேவைகள் குறித்தும், விண்ணப்பங்களோடிருக்கும் மக்கள் தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக்கொள்வோம்.

இப்புதிய மாதம் இறை ஆற்றலோடும், ஆலோசனைகளோடும் நம் வாழ்வைத் தொடரும் மாதமாக அமைய இறைவேண்டுதலோடு உங்களை அன்பாய் வாழ்த்துகிறேன்.

கர்த்தர்தாமே உங்களனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

## ஆயர் அருளுரை


## கர்த்தரால் கனம்பெறும் நடக்கை

“நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்” – ஏசாயா 43:4

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களை மனமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த நாட்கள் முழுவதும் கர்த்தர் நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் செய்த எண்ணில்லாத நன்மைகளையும் மட்டற்ற கிருபைகளையும் நினைத்துப் பார்த்து கர்த்தருக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துவோம்.

இந்த புதிய மாதம் நம் அனைவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமானதாக, நற்கனி கொடுக்கிற வருங்காலமாக, நம் குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் நன்மை நிறைந்ததாக அமையும்படி ஜெபிக்கிறேன். நாம் கர்த்தருடைய பார்வைக்கு அருமையான நடக்கை உடையவர்களாயின் கனம்பெறுவோம் என்னும் சிந்தையோடு இம்மாத செய்திக்குள் கடந்துவருவோம்.

### தானியேல்:-



நாம் கர்த்தருடைய பார்வைக்கு அருமையாயிருப்போமானால் இந்த உலகத்தில் கர்த்தரால் நாம் கனம் பெறுவோம். தானியேல் தீர்க்கதரிசி அடிமையாக பாபிலோனுக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும், “ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் முகங்குப்புற விழுந்து, தானியேலை வணங்கி அவனுக்கு காணிக்கை செலுத்தவும், தூபங்காட்டவும் கட்டளையிட்டான்” (தானியேல் 2:46) என்று வேதத்தில் வாசிக்கிறோம். எப்படி ஒரு அடிமையானவரை ஒரு சாம்ராஜ்யத்தின் அதிபதி முகங்குப்புற விழுந்து வணங்கமுடியும்? ஏனென்றால் தானியேல் அந்த இராஜாவின் சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் சொன்னபடியினால் அவன் ஆச்சரியப்பட்டு அப்படி செய்தான்.

தானியேலினால் எப்படி சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் சொல்ல முடிந்தது? அவர் கர்த்தரோடு இணைந்து இருந்தபடியால், கர்த்தர் தானியேல் கேட்டவுடன் அவருக்குப் பதிலைக் கொடுத்தார். நாமும்

தேவனோடு இணைந்து இருப்போமானால், கர்த்தருக்கு பிரியமானவர்களாக இருந்தால் நம்முடைய நிலைமை அடிமையின் வாழ்வைப் போல இருந்தாலும், தேவன் ஏற்ற வேளையிலே நம்மை உயர்த்தி, இராஜாக்களும் நம்முன் விழுந்து பணியும்படி செய்வார். அல்லேலூயா!

## மனத்தாழ்மையுள்ளவன்:-

“மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான்” (நீதிமொழிகள் 29:23) என்று வேதம் கூறுகிறது. நம்மிடம் வெளிப்படையான தாழ்மை நடக்கை அல்ல, நமது நடக்கை மனத்தாழ்மையுள்ளதாக, கர்த்தருக்கு முன்பாக நம்மை தாழ்த்துகிறவர்களாக அவர் காணும்போது நாம் தாழ்மையுள்ள நடக்கையுள்ளவர்களாக இருக்கும்போது அவர் நம்மை கனம்பண்ணுகிறார்.

“தாழ்மையுள்ளவனுக்கு அவர் கிருபை அளிக்கிறார்” என்று வேத வாக்குத்தத்தின்படி கர்த்தருடைய பார்வைக்கு அருமையானவர்களாக, கர்த்தரால் கனம் பெறுபவர்களாக, நாம் மாறும்படி நமது வாழ்க்கை அமையும்படியாக தேவன் நமக்கு உதவி செய்வாராக. உலக ஜனங்களைப் பார்க்கிலும் தம்மை நேசிக்கிற தம் ஜனங்களை அவர்கள் இருக்கும் இடங்களில் கர்த்தர் உயர்த்துகிறார். மற்றவர்களுக்கு முன்பாக அவர்களை கனப்படுத்துகிறார். அதற்கேற்ற வாழ்க்கை நம்மில் காணப்படட்டும். கர்த்தர் நம்மை எந்த நிலையில் உயர்த்தும்போதும் நாம் மனத் தாழ்மையுள்ளவர்களாக இருப்போம். அப்போது தேவன் நம்மை மற்றவர்களுக்குக் முன்பாக இன்னும் அதிகமாக கனம்பண்ணுவார்.

## ஊழியம் செய்கிறவன்:-

கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்களை கர்த்தர் கனம் பண்ணுவார் (யோவான் 12:26). கர்த்தரை கனம் பண்ணுகிறவர்களை கர்த்தர் கனம் பண்ணுவார் (1சாமுவேல் 2:30) என்று இன்னும் எத்தனையோ காரியங்களை சொல்லிக்கொண்டே போகலாம்.

ஒரு முறை ராஜாவாகிய அகாஸ்வேரு “ஆமான் உள்ளே வந்தபோது, ராஜா அவனை நோக்கி; ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்யப்படவேண்டும் என்று கேட்டான். அதற்கு ஆமான், என்னையன்றி யாரை ராஜா கனம்பண்ண விரும்புவார் என்று தன் மனதிலே நினைத்து, ராஜாவை நோக்கி, ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு செய்யவேண்டியது என்னவென்றால், ராஜா உடுத்திக்கொள்ளுகிற ராஜவஸ்திரமும், ராஜா ஏறுகிற குதிரையும், அவர் சிரசிலே தரிக்கப்படும் ராஜமுடியும் கொண்டு வரப்பட வேண்டும். அந்த வஸ்திரமும், குதிரையும் ராஜாவுடைய பிரதான பிரபுக்களில் ஒருவனுடைய கையிலே கொடுக்கப்பட வேண்டும். ராஜா கனம் பண்ண விரும்புகிற

மனுஷனை அலங்கரித்தபின், அவனை குதிரையின்மேல் ஏற்றி, நகர வீதியில் உலாவும்படி செய்து, ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாகக் கூறப்படவேண்டும் என்றான்" (எஸ்தர் 6:6-9) என்று வேதத்தில் வாசிக்கிறோம். ஆமான் இராஜா தன்னைத்தான் கனம் பண்ணப்போகிறார் என்று இந்த காரியங்களை சொன்னான்.

இந்த உலகத்திலும் கர்த்தர் அற்ற மற்றவர்கள் தங்களுக்குத்தான் கனம் வரப்போகிறது என்று நினைத்துக்கொண்டு காரியங்களை செய்கிறார்கள். 'ஆனால் அப்பொழுது ராஜா ஆமானை நோக்கி, சீக்கிரமாய் நீ சொன்னபடி வஸ்திரத்தையும், குதிரையையும் கொண்டுபோய், ராஜ அரமனையின் வாசலிலே உட்கார்ந்திருக்கிற யூதனாகிய மொர்தெகாய்க்கு அந்தபிரகாரம் செய்; நீ சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தவறாதபடி பார் என்றான்' (எஸ்தர் 6:10) என்று சொல்வதைப் பார்க்கிறோம்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்குத்தான் கனம் மகிமை எல்லாமே! ஒருவேளை மற்றவர்கள் நினைத்து கொள்ளலாம். என்னை விட கனம்பெற யார் மேலானவர்கள் என்று! ஆனால் நாம் கர்த்தருடைய பிள்ளைகளாய் அவருடைய பார்வைக்கு அருமையானவர்களாக இருந்தால் நமக்குத்தான் கர்த்தர் அந்த கனத்தைக் கொடுப்பார்! அல்லேலூயா!

இந்த புதிய நாளில் கர்த்தரால் கனம்பெறுகிறவர்களாக, அவருடைய பார்வைக்கு அருமையானவர்களாக நம் வாழ்க்கை அமையட்டும். அப்போது அந்த அருமையான வாக்குத்தத்தம் நம் வாழ்விலும் ஆம் என்றும் ஆமென் என்றும் நிறைவேறும். ஆமென் அல்லேலூயா!

**அன்புடன் போதகர்**
**Rev. Dr. N. ஜெசின்**

## வாழ்த்துகிறோம்!

### "இது கர்த்தரால் ஆயிற்று, நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்"



கர்த்தருடைய கிருபையால் செப்டம்பர் மாதம் 1-ம் தேதி பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள

**Mr. Anshio Shajin K. & Mrs. Adlin Kiruba D.J.**

தம்பதியினரை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# டோக்கியோ ஒலிம்பிக்கில் நன்னடக்கை பாடம்

2021 ஜூலை 23 முதல் நடைபெற்றுவரும் டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான உயரம் தாண்டுதலின் இறுதிகாட்சி. இத்தாலியின் ஜியான்மார்கோ தம்பேரி இறுதிப்போட்டியில் கத்தாரின் முடாஸ் எஸ்ஸா பார்ஷிமை எதிர்கொண்டார்.




இருவரும் 2.37 மீட்டர் தாவி சமநிலையில் இருந்தனர். ஒலிம்பிக் அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் மேலும் மூன்று முயற்சிகள் கொடுத்தனர். ஆனால் அவர்களால் 2.37 மீட்டருக்கு மேல் தாண்ட முடியவில்லை. இருவருக்கும் மேலும் ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் காலில் ஏற்பட்ட கடுமையான காயம் காரணமாக இத்தாலியின் தம்பேரி கடைசி முயற்சியிலிருந்து விலகினார். வேறு போட்டியாளர்கள் இல்லாத நிலையில், கத்தார் நாட்டின் பார்ஷிமுக்கு அவர் தனியாக தங்கத்தை எளிதாக அடையும் தருணம். ஆனால் பார்சிம் அதிகாரியிடம், “இறுதி முயற்சியிலிருந்து நான் விலகினால் தங்கத்தை எங்கள் இருவருக்கும் பகிரமுடியுமா?” என்று கேட்டுள்ளார். அதிகாரி விதிகளைப் பரிசீலித்து “ஆம் தங்கம் உங்கள் இருவருக்கும் பகிரப்படும்” என்று கூறினார். அதற்கு பார்சிம் யோசிக்க ஒன்றுமில்லை. கடைசி முயற்சியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

உன்னிப்பாக நடப்பவற்றை கவனித்த எதிர் போட்டியாளரான இத்தாலிய தம்பேரி ஓடி வந்து பார்ஷிமை கட்டிப்பிடித்து அலறினார். அங்கு நாம் பார்த்தது நம் இதயங்களைத் தொடும் விளையாட்டுகளில் அன்பின் பெரும்பங்கு.

இது மதங்கள், வண்ணங்கள் மற்றும் எல்லைகளை பொருத்தமற்றதாக ஆக்கும் விவரிக்க முடியாத விளையாட்டின் அடிப்படையை வெளிப்படுத்துகிறது.

உலக விளையாட்டுப் போட்டியின் உயர்ந்த ஒலிம்பிக்கில் வேறு நாட்டைச் சேர்ந்த தன் எதிர் போட்டியாளர் அடிபட்டு தம்மோடு போட்டியிட முடியாத நிலையில் தனக்கு மட்டும் கிடைக்கவேண்டிய தங்கப் பதக்கத்தை பகிர்ந்துகொள்ளும் உணர்வு மேன்மைக்குரியது. மகிழ்ச்சியை இத்தாலி

வீருக்கு கொடுத்த மகிழ்ச்சியும் பெருமையும் சேர தம் இருப்பிடம் போகிறார் கத்தார் வீரர்.

கற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால் எதிலும் பாடம் இருக்கும். இதிலும் பாடம் இருக்கிறது. பாருங்கள் மகிழ்ச்சியை.., சொந்த சகோதர சகோதரிகளுக்குள் சொத்து பிரிக்கும்போதும், வரவு செலவுகளிலும் காசு பணத்திற்காக சண்டைபோட்டு அழும், அழ வைக்கும் இன்றைய நிலையில் விளையாட்டு மதம், நாடு எல்லைகளைக் கடந்து இன்பத்தை வழங்கும் இனிய நிகழ்வு, வேறு நாட்டை சேர்ந்த போட்டியாளருக்கு மகிழ்ச்சியைத் தர வைக்கிறது விளையாட்டு.

நமக்கு நாம் கற்ற கல்வியும், போதனையும், சொந்த சகோதரனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க சொல்லிக் கொடுக்கிறதா? நன்னடக்கை கற்றுக்கொள்வோம்.

**அன்புடன் போதகர்**

## மகளிர் பகுதி

## "விசுவாச நடக்கையில் உறுதியாயிருங்கள்"

கிறிஸ்துவில் பிரியமானவர்களே!

திருச்சபை பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்கள். புதிய மாதத்தில் நல்ல நடக்கை என்னும் தலைப்பில் இணைந்து சிந்திப்போம்.

நல்ல நடக்கை என்று கூறியவுடனே கிறிஸ்துவோடு விசுவாசத்தில் உறுதியாய் நடப்பதைத்தான் திருமறை நமக்கு வெளிப்படுத்துகின்றது.

ஆபத்துக்கள், விபத்துக்கள், விழுகைகள் நிறைந்த இவ்வுலகில் எப்படி நடக்கவேண்டும் எனத் திருமறை கற்றுத்தருகிறது தெரியுமா?

"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில், உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் (1பேதுரு 5:8-9).

இரண்டு வாலிபர்கள் ஒரு காட்டில் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். நடு காட்டை வந்தடைந்தபோது, தூரத்தில் நான்கு கரடிகள் வருவதைக் கண்டார்கள். பின்னால் திரும்ப ஓடவும் முடியாது. அந்த கரடிகள் தொடர்ந்து அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தன. என்ன செய்வது என்று தெரியாத நிலையில் இரண்டு பேரும் சில நொடிகளில் எதையாவது

தீர்மானம் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, இரண்டு பேரும் ஒரே சத்தமாக கத்தவேண்டும் என்று தீர்மானித்தார்கள்.



அதன்படி இரண்டு பேரும் கண்களை மூடிக்கொண்டு கத்த ஆரம்பித்தார்கள். இதோ கரடிகள் பக்கத்தில் வந்துவிட்டது என நினைத்து மெதுவாக கண்களை திறந்து பார்த்தபோது, அவைகள் அவர்கள் பக்கத்திலேயே வரவில்லை. அவை பக்கத்தில் ஒரு பள்ளத்தில் இறங்கி தூரப்போய் கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

பிரியமானவர்களே! நம் வாழ்விலும் சில கரடிகள் போன்ற பிரச்சனைகள் வந்து நம்மை அப்படியே அழுத்துவதை போன்று காணப்படலாம். ஒருவேளை வியாதியோ, கடன் தொல்லையோ, வறுமையோ, வேலை பிரச்சனையோ இருக்கலாம்.

எனக்கு தெரிந்த ஒரு அருமையான கிறிஸ்தவ குடும்பத்தில் அவர்களது வாலிப வயதிலுள்ள மகளுக்கு திடீரென்று இருதயம் வேகமாக துடிக்க ஆரம்பித்தது. ஆரம்பத்தில் ஏதோ சாதாரண பிரச்சனை என்று நினைத்த அவர்கள் அதை லேசாக விட்டுவிட்டார்கள். ஆனால் நாளாக நாளாக அதிகமாக மூச்சு விடவே கஷ்டமானபோது வைத்தியர்களை போய் பார்த்தார்கள். அதில் இருதய வைத்தியர் அவளுக்கு இருதயத்தில் ஒரு பிரச்சனையும் இல்லை என்று சொல்லிவிட்டார்.

ஆனால் இருதயத் துடிப்பு அதிகமாவதும், மூச்சிரைப்பதும் நிற்கவில்லை. ஆகவே மற்ற வைத்தியரிடம் சென்று பார்த்தபோது அவர் அநேக பரிசோதனைகளை எழுதி அவர்கள் செய்தார்கள். ஒவ்வொரு நாளும் இப்படி இருக்குமோ, அப்படி இருக்குமோ என்று கரடிகளை போன்ற பயமுறுத்தல்கள் அவர்களுக்கு இருந்தது. சத்துரு வெற்றி எடுத்து விடுவானோ என்று அங்கலாய்ப்புகள் இருந்தன.

கர்த்தரை உறுதியாக பற்றிக்கொண்டோமே, கர்த்தர் கைவிடுவாரோ என்று விசுவாசத்திலும் தளர்ச்சி ஏற்பட ஆரம்பித்தபோது, இல்லை எங்கள் தேவன் எங்களை கைவிடமாட்டார் என்று விசுவாசத்தில் உறுதிப்பட்டு, இன்னும் அதிகமாக அவரை பற்றிக்கொண்டார்கள். கடைசியாக வைத்தியர்கள் அவளுக்கு என்ன வியாதி என்று கண்டுபிடித்தார்கள். அதற்கு மருந்தாக ஒரு வைட்டமின் மாத்திரை சாப்பிட்டால் போதும் என்று சொல்லி, அதை அவள் சாப்பிட ஆரம்பித்து நன்கு சுகமடைந்தாள். அல்லேலூயா!

நம் வாழ்விலும் கரடிகளை போன்று சாத்தான் எவனை விழுங்கலாமோ என்று சுற்றித் திரியும்போது, ஒரு வேளை அவன் விழுங்கி விடுவானோ என்று பயந்து விசுவாசம் குன்றி போய் இருக்கிறோமா? பயப்படாதீர்கள். அவன் கெர்ச்சிக்கிற சிங்கமே தவிர அவனால் நம்மை விழுங்கமுடியாது. ஏனெனில் அவனை பார்க்கிலும் பெரியவர் நமக்குள்ளே இருக்கிறார். அவர் அற்புதங்கள் செய்கிறவர். நம்மை சத்துரு கடித்து விழுங்கிவிட அனுமதிக்கிறவர் அல்ல. அவர் நம்மை காக்கிறவர். யோபுவிற்கு எத்தனையோ பிரச்சனைகள் வந்தது. ஆனால் அவனது உயிரை தொடுவதற்கு கர்த்தர் சத்துருவுக்கு அனுமதிக்கவில்லை. பவுலுக்கு உயிர்போகும் நிலை எத்தனையோ முறை வந்தது. ஆனாலும் அவர் ஊழியத்தை முடிக்கும்வரைக்கும் அவருக்கு உயிர் சேதம் வரவில்லை. பிரச்சனைகளை கண்டு சோர்ந்து போகாதீர்கள். பாடுகளை கண்டு துவண்டு போய்விடாதீர்கள். இது முடிவு அல்ல. ஒரு இரவு உண்டென்றால் ஒரு விடியலும் உண்டல்லவா? வேலைக்கு போகிறோம் என்றால் திரும்ப வந்துதானே தீரவேண்டும்!

ஆகவே எல்லாவற்றிற்கும் நிச்சயமாகவே முடிவு உண்டு. கர்த்தரை தேடுபவர்களுக்கு நிச்சயமாகவே அது நல்ல முடிவாகவே இருக்கும். நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது (நீதி. 23:18).

பரலோக தகப்பனே, சத்துரு எங்களை விழுங்கும்படியாக பிரச்சனைகளை கொண்டு வந்தாலும், வெள்ளம்போல எங்களை அடித்துக்கொண்டுபோக வந்தாலும், ஆவியானவர் அவனுக்கு எதிராக கொடி ஏற்றி, எங்களுக்கு யெகோவா நிசியாக வெற்றிக்கொடுக்கிற தயவிற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். எந்த வேளையிலும் விசுவாசத்தில் சோர்ந்து போய்விடாதபடி உம்மையே அண்டிக்கொள்ள கிருபை தாரும் என்று ஒவ்வொரு நாளும் விசுவாசத்தோடு ஜெபித்து நமது வாழ்வை முன்வைத்துச் செல்வோமாயின் கர்த்தர் நம்மை நடத்துவார். நம் பிரச்சனைகளை துரத்துவார்.

23-ம் சங்கீதத்தில் சங்கீதக்காரர் தாவீது இதை அழகாய் குறிப்பிடுகிறார். “நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்” கர்த்தரோடு நடக்க கற்றுக்கொள்வோம். கவலை நமக்கில்லை ஒத்துக்கொள்வோம். கர்த்தரின் ஆசிபெற்றுக்கொள்வோம். ஆமென்!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## சோதனையிலும் சாதிப்போம்



மண்ணில் : 03.09.1889
விண்ணில் :
ஊர் : ராம்பூர், பஞ்சாப்
நாடு : இந்தியா
தரிசன பூமி : திபெத்

திபெத் நாடு, புத்த மதத்தைச் சார்ந்த மக்கள், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கவோ, கேட்கவோ தடை செய்யப்பட்ட இடம். மீறினால் கொடூரமான தண்டனை.

உள்ளத்தில் கிறிஸ்துவையும், கரங்களில் வேதாகமத்தையும் சுமந்து புறப்பட்டார் சாது சுந்தர் சிங். பிறப்பிலே அவர் ஒரு சீக்கியர். வளர்ப்பிலே மிகவும் சடங்காச்சாரங்களுடன் வளர்க்கப்பட்டவர்.

19-வது வயதிலே திபெத்தை நோக்கி சுவிசேஷத்தைச் சுமந்து சென்றார் சாது. திபெத் லாமாக்களால் அவர் பிடிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார். அவ்விடத்திலிருந்து விரட்டப்பட்டார்.

துன்பங்களை இன்பமாக ஏற்றுக்கொண்டு மீண்டும் சுவிசேஷப்பணியைத் தொடர்ந்தார். அந்தோ! லாமாக்களின் தலைவனிடம் பிடிபட்டார். தண்டனையோ மிகவும் கொடூரம்

பாழடைந்த கிணறு. தவறு செய்தவர்களை உள்ளே போட்டு மூடிவிடுவார்கள். உடல் அழுகி சாகவேண்டியதுதான்.

சாது சுந்தர் சிங்குக்கும் இதே தண்டனை கொடுக்கப்பட்டது. உள்ளே விழுந்தவுடன் அவர் தோள்பட்டை உடைந்தது. அழுகிய பிண நாற்றத்தால் வயிறு குமட்டியது. எங்கு பார்த்தாலும் பிணங்கள். கிணற்றுக்குள்ளிருந்தே ஜெபிக்க ஆரம்பித்தார் சுந்தர் சிங். மூன்று நாட்களுக்குப்பின் ஓர் அதிசய மனிதரால் அக்கிணற்றுக் கதவு திறக்கப்பட்டு காப்பாற்றப்பட்டார். மீண்டும் தன் பணியைத் தொடர்ந்தார்.

திபெத், நேபாளம் மற்றும் இந்தியாவின் பல பாகங்களிலும் ஊழியம் செய்த இவர் எளிமையாகவும், இனிமையாகவும், உவமைகளாலும் போதிப்பதில் சிறந்தவர். இவரது நூல்கள் கிறிஸ்தவ ஜீவியத்தின் ஊன்றுகொல்கள். **இரத்தம் சிந்தும் பாதங்களையுடைய அப்போஸ்தலன் என்றும், இந்திய அப்போஸ்தலன் என்றும் அழைக்கப்பட்டார்.**

அன்பரே! கிறிஸ்துவிற்காக எவ்விதப் பாடுகளையும் சகிக்க ஆயத்தமா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:-** வாலிபரே! விழித்தெழும்புங்கள்! பாவ ரோகத்தால் நசிந்து போகும் ஆன்மாக்கள் எத்தனை என்று சற்று நினைத்துப் பாருங்கள் - சாது சுந்தர்சிங்

**குயவனின் கரங்களில்:-** ஆண்டவரே! எத்தனை துன்பங்கள் வந்தாலும் உம்மில் நிலைத்திருக்க எனக்கு பெலன் தாரும்.

**தியானத்திற்கு:-** (2 இராஜாக்கள் 8, புலம்பல் 4, 2கொரிந்தியர் 1-2)

## நன்னடக்கை

### ஆண்டவருக்கு பயந்து நல்நடத்தை உடையவர்கள் பெறும் ஆசிகள்:-

இஸ்ரவேல் மக்கள் அநீதி என்னும் வலையில் சிக்கித் தவித்த காலம் அது. அதிகாரிகள் நியாயத்தை விலைக்கு விற்று கசப்பாக மாற்றியதால் அநீதியும், அநியாயமும் புரையோடிப் போயிருந்தது. அந்த நேரத்தில் நீதி நியாயத்திற்காய் மக்கள் ஏங்கித் தவித்துள்ளனர். கடவுள் நியாயத்திற்காய் மக்கள் ஏங்கித்தவித்துள்ளனர். கடவுள் சமுதாயத்தின் சீர்கேடுகளைக் கண்டு, அதனால் எழுந்த மக்களின் ஏக்கத்தை அங்கீகரித்து, தீமையை வேரோடு ஒழித்து, நீதியை நிலைநாட்டும் ஓர் நாள் வரப்போகிறது. இது கடவுளின் வாக்கும் ஆகும். மல்கியா 4:2 என்ற திருமறை பகுதியில் "நீதியின் சூரியன் உங்கள் மேல் உதிக்கும்" என்பது கடவுளின் வாக்குறுதி. இவ்வாக்குறுதியில் கடவுள் நம்மில் எதிர்பார்ப்பது என்ன? இவ்வாக்குறுதியினால் நமக்கு உண்டாகும் நன்மை என்ன என்பதை பார்ப்போம்.

### நீதியின் சூரியன் நம்மேல் உதிக்கும் (மல்கியா 4:2):-




நீதியின் சூரியனாம் இறைவன் நம் மேல் உதிப்பதற்கு நாம் அவருக்குப் பயந்து நடக்க வேண்டும். இதற்கு ஒரு நிபந்தனையைத் தருகிறார். "…..என் நாமத்திற்கு அஞ்சியிருக்கிற உங்கள் மேல்…." (மல் 4:2) என்பதுதான் இந்த நிபந்தனை. ஆண்டவர் நம்மைப் பார்க்கிறார். நம் செய்திகளைக் கவனிக்கிறார். நம் நடையை எண்ணுகிறார். நம் வார்த்தைகளை உற்று நோக்குகிறார்.

எனவே நாம் தவறு செய்யக் கூடாது என்னும் உள்ளுணர்வு நம்மில் இருப்பதுதான் நாம் கடவுளுக்குப் பயப்படும் பயம். திருமுழுக்கு யோவான் செய்தியின் படி தங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக வாங்கும் ஆயக்காரரும், அச்சுறுத்திப் பணம் பறித்து பொய்க் குற்றம் சுமத்தும் படைவீரர்களும் செய்யும் செயல்கள். இத்தகைய தீச்செயல்களை விட்டு கடவுளுக்குப் பயந்து நடப்போம். கடவுளுக்குப் பயந்து நடப்போர் இறை நீதியை காண்பர். அவர்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும். நீதி தங்கும் இல்லத்தில் இறைவன் தாபரமாவார். நம் இல்லங்களில் இறைவன் நீதி தங்க, கடவுளுக்கு அஞ்சும் நல் நடக்கையுடன் நடப்போமாக.

## கொழுத்த கன்றுகள் போல் வளருவோம்:-

கடவுளுக்குப் பயந்து நடந்தால் நமக்காக நீதியின் சூரியனாம் இறைவன் எழுந்தருளுவார். அதன் விளைவானது நீதியின் சூரியனின் செட்டைகளின் கீழ் உள்ள நலந்தரும் மருந்தைப் பெற்று கன்றுகளைப் போல் வளரும் பாக்கியமாகும். கர்த்தருக்குப் பயப்படுதல் நீண்ட ஆயுளைத் தரும். இவ்வாறு நடப்பவருக்கு மன நிறைவு கிட்டும். தீங்கும் அவரை அணுகாது (நீதி 19:23) என்றும் திருறையில் நாம் காண்கிறோம்.

ஆக, தீமை வேரறுக்கப்படும் அந்நாளில் இறைவனுக்கும் அவருக்கு அஞ்சி நடக்கும் மக்களுக்குமிடையே உள்ள உறவு வலுப்படும் (வெளி 21:1-3) இறைவன் மக்களோடு இணைந்திருப்பார். ஆண்டவருக்கு அஞ்சி நடக்கும்போது அவர் அருள் நம்மேல் தங்கும். அப்போது நாம் நம் பெலவீனங்கள் நீங்கி ஆரோக்கியம் பெற்று கொழுத்த கன்றுகள் போல வளருவோம் (வெளி 21:3). எனவே இந்நிலையில் வளர்வதற்கு நம்மை அர்பணிப்போம். இருளில் நடக்கிற மக்களுக்கு ஒளியாய் இவ்வுலகில் வந்த நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்துவை நம் நல்நடக்கைகளின் மூலமாக நமக்குரியவராக்கிக் கொள்ளுவோம். நீதியின் சூரியனின் செட்டைகளின் கீழ் பெலன் பெற்று செழித்துவளர இறைவனிடம் மன்றாடுவோமாக.

- **V.G மஹிழா ஜெங்கின் ராஜ்**

## செப்டம்பர் 2021 மாத கேள்விகள்

### (1 கொரிந்தியர் 9 முதல் 16 முடிய)

1. பரிகரிக்கப்படுங் கடைசி சத்துரு எது?
2. அஞ்ஞானிகள் யாருக்கு பலியிடுகிறார்கள்?
3. தேவனானவர் சபையிலே முதலாவதாய் யாரை ஏற்படுத்தினார்?
4. எதன் வாய் கட்டப்படக்கூடாது என்று மோசேயின் பிரமாணத்தில் எழுதியிருக்கிறது?
5. பாவத்தின் பெலன் எது?
6. எது இல்லாவிட்டால் சத்தமிடுகிற வெண்கலம் போலிருப்பேன்?
7. சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறவனுக்கு கொடுக்கப்பட்ட உத்தியோகம் எது?
8. சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள் எவை?
9. இலட்சணமுள்ளவைகளுக்கு எது வேண்டியதில்லை?
10. அகாயா நாட்டிலே முதற்பலனானவர்கள் யார்?
11. எப்போது குறைவானது ஒழிந்துபோம்?
12. ஞானக் கன்மலை யார்?
13. எந்த சரீரம் முந்தினது?
14. ஸ்திரீயானவள் புருஷனுக்கு எப்படி இருக்கிறாள்?
15. சபைக்கு பக்தி விருத்தி உண்டாக பேசுகிறவன் யார்?
16. நாம் எதை பெறும்படிக்கு ஓடவேண்டும்?
17. இயேசுவை சபிக்கப்பட்டவன் என்று சொல்லாதவன் யார்?
18. எது நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்?
19. கிறிஸ்துவை பரீட்சை பார்த்தவர்கள் எதால் அழிக்கப்பட்டார்கள்?
20. எல்லாரும் யாருக்குள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்?

## ஆகஸ்ட் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. பக்தி விருத்தியை – 1கொரி. 8:1
2. பைத்தியமாயிருக்கிறது – 1கொரி. 3:19

3. துப்புரவு, உண்மை – 1கொரி. 5:8
4. சிலுவையைப் பற்றிய உபதேசம் - 1கொரி. 1:18
5. கன்னிகைகளைக் குறித்து – 1கொரி. 7:25
6. உண்மையுள்ளவனென்று – 1கொரி. 4:2
7. ஞானத்தை – 1கொரி. 2:6
8. தேவனில் அன்புகூருகிறவன் -1கொரி. 8:3
9. யூதர்கள் - 1கொரி. 1:22
10. பெலத்திலே – 1கொரி. 4:20
11. பிரமாணத்தினால் - 1கொரி. 7:39
12. ஞானிகளுடைய – 1கொரி. 3:20
13. குலோவேயாளின் - 1கொரி. 1:11
14. தேவனே – 1கொரி. 5:13
15. ஜென்மசுபாவமான மனுஷன் - 1கொரி. 2:14
16. தேவனுடைய ஆலயத்தை கெடுக்கிறவனை – 1கொரி. 3:17
17. ஞானிகளை – 1கொரி. 1:27
18. அஸ்திபாரம் - 1கொரி. 3:10
19. தன் மனைவியால் - 1கொரி. 7:14
20. ஆவிக்குரியவன் - 1கொரி. 2:15

## ஆகஸ்ட் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Manju Martin |
| Mrs. Aspin Bejo | Mrs. Mary Praveena Gobinath |
| Mrs. Boopathi Baskar | Mrs. Percy Jean |
| Mrs. Felsi Rani John | Mrs. Priyadarsini Kanagavel |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Gracilin Melba Sujin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Shiney Johan |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Thamari Johnson |
| Mrs. Josephin Anto Kingston | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Leela Gladson | Mrs. Virgin Jegatha Jino |

## செப்டம்பர் 2021 மாத கேள்விகள்

### (ஏசாயா 61 முதல் எரேமியா 4 முடிய)

1. எந்த தெய்வத்துக்குப் பானபலியை நிறைய வார்க்கிறார்கள்?
2. கர்த்தருடைய சிங்காசனம் என்று எதை அழைப்பார்கள்?
3. சீயோன் குமாரத்தியை நோக்கி எப்படிப்பட்ட நகரம் என்று பெயர்பெறுவாய் என ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறார்?
4. எது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது?
5. புழுதி எதற்கு இரையாகும்?
6. தாறுமாறாய் வேகமாக ஓடுகிற விலங்கு எது?
7. மணவாட்டி தன்னை எதனால் சிங்காரித்துக் கொள்ளுகிறாள்?
8. பரிசுத்த பட்டணங்கள் என்ன ஆயிற்று?
9. செய்தியை அறிவிக்கிற சத்தம் எங்கிருந்து வந்தது?
10. தங்கள் நினைவுகளின்படி நடக்கிறவர்கள் யார்?
11. எரேமியாவின் ஊர் எது?
12. எந்த நகரங்களை கர்த்தர் புதுநாமத்தால் அழைப்பேன் என்று கூறுகிறார்?
13. வனாந்தரத்திலே காத்திருப்பவன் யார்?
14. பரிசுத்த ஸ்தலத்தை மிதித்துப் போட்டவர்கள் யார்?
15. எந்த பட்டணங்களின் புத்திரர் உச்சந்தலையை நொறுக்குகிறார்கள்?
16. கர்த்தரை தேடுகிற ஜனத்துக்கு ஆட்டுத்தொழுவமாக இருப்பது எது?
17. வனாந்தரத்திலுள்ள உயர்நிலங்களிலிருந்து புறப்பட்டு வருவது எது?
18. யார் சத்திய தேவன் பேரில் ஆணையிடுவான்?
19. காற்றைப்போல் அடித்துக்கொண்டு போகிறது எது?
20. விக்கிரகத்தை ஸ்தோத்தரிக்கிறவனாக இருக்கிறவன் யார்?

## ஆகஸ்ட் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. கொல்லன் - ஏசாயா 54:16
2. தர்ஷீசின் - ஏசாயா 60:9
3. நித்திய மகிழ்ச்சி – ஏசாயா 51:11
4. அண்ணகர்கள் - ஏசாயா 56:4,5
5. வைராக்கியத்தை – ஏசாயா 59:17
6. எருசலேம் - ஏசாயா 51:17
7. ஆடு – ஏசாயா 53:7
8. பரிசுத்த பர்வதத்திலே – ஏசாயா 57:13
9. சுவிசேஷகனுடைய – ஏசாயா 52:7
10. வசனம் - ஏசாயா 55:11
11. பரிசுத்த நாளாகிய ஓய்வுநாளில் - ஏசாயா 58:13
12. பலவான்களை – ஏசாயா 53:12
13. பொன்னையும், தூபவர்க்கத்தையும் - ஏசாயா 60:6
14. சமாதானத்தின் உடன்படிக்கை – ஏசாயா 54:10
15. நீதிமான் - ஏசாயா 57:1
16. சீயோன் - ஏசாயா 51:16
17. ஆத்துமா – ஏசாயா 55:2
18. அக்கிரமங்கள் - ஏசாயா 59:2
19. சமாதானம் - ஏசாயா 57:21
20. தேவதாரு விருட்சம் - ஏசாயா 55:13

## ஆகஸ்ட் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Johan Pratheep |
| Mr. Anu | Mr. Justus Martin |
| Mr. Bejo Nelson | Mr. Lenin Raj |
| Mr. Daniel Raj P. | Mr. Prince J. P. |
| Mr. Jean C. R. Shibin | Mr. Ramesh R. |
| Mr. Jino John | Mr. Sujith Gladson |

*May God Bless All*

## Birthday Celebrants – September 2021

| | |
|---|---|
| 01st September | Miss. Cheryl Hannah, D/o Late Mr. Immanuel Prince |
| 01st September | Mr. Benny Moses |
| 02nd September | Mr. J. Vinolin Vetha Kumar |
| 02nd September | Mrs. Abisha, W/o Mr. Melbin |
| 03rd September | Mrs. Jeevlin Esther, W/o Mr. Benny Moses |
| 03rd September | Miss. Joylin Angel, D/o Mr. Jenil Singh |
| 06th September | Mrs. Gnana Jenisha, W/o Mr. Justin Johnson |
| 07th September | Miss. Joanna, D/o Mr. Berin Raja |
| 07th September | Mr. Robinson |
| 08th September | Master. Julian Aldric, S/o Mr. Joel |
| 08th September | Mrs. G. Linta Salvin, D/o Mr. George |
| 09th September | Mrs. Annlin Kirubha, W/o Mr. Herbert Goldston |
| 09th September | Mr. Rex Macedo |
| 11th September | Miss.R. Marshya, D/o Mr. Ramji |
| 11th September | Mr. Selvakumar |
| 13th September | Mrs. Enolia, W/o Mr. Michael |
| 14th September | Miss. Britny Pearlzlint, D/o Mr. Jenkin Raj |
| 15th September | Miss. Merzlin Awana, D/o Mr. Melbin |
| 16th September | Master. Levin R. Macedo, S/o Mr. Rex Macedo |
| 19th September | Master. Manasseh Gabriel, S/o Mr. Srinivas |
| 19th September | Mrs. P. N. Sobia, W/o Mr. Jaspher Stalin |
| 20th September | Mrs. Nisha, W/o Mr. V. N. Rajan |
| 21st September | Mr. Arumainayagam Rajasingh |
| 23rd September | Mr. T. Santhosh |
| 24th September | Mrs. Sterbie, W/o Mr. Ramji |
| 25th September | Master. Jason Samuel, S/o Mr. Vimal Kumar |
| 26th September | Master. Aryan Anu A. R., S/o Mr. Anu |

| | |
|---|---|
| 27th September | Mrs. Priyadarsini, W/o Mr. Kanagavel |
| 27th September | Miss. Johanna Shirly, D/o Mr. Vimal Kumar |
| 27th September | Master. B. Nidhin Broose, S/o Mr. Broosewelt |
| 29th September | Master. Samuel Adriel Sanjay, S/o Mr. Michael |

## Wedding Day Anniversaries – September 2021

| | |
|---|---|
| 02nd September | Mr. Austin Daniel Raj & Mrs. Ancy |
| 04th September | Mr. Venil Singh & Mrs. Sobiya |
| 07th September | Mr. Sujith & Mrs. Sheeba |
| 08th September | Mr. Suresh P. & Mrs. Sajitha |
| 10th September | Mr. Jino John & Mrs. Virgin Jegatha |
| 11th September | Mr. John Jacob & Mrs. Felsy |
| 12th September | Mr. Arun Paul & Mrs. Saja |
| 14th September | Mr. J. P. Prince & Mrs. Vanitha Rani |
| 20th September | Mr. Augustin & Mrs. Sangeeth |
| 28th September | Mr. Justus Martin & Mrs. Manju |

## நிகழ்வும் ~ பாடமும்

### இதுதாங்க உண்மை

- மகனின் மாற்றத்தை திருமணத்திற்குப்பின் உணரலாம்.
- மகளின் மாற்றத்தை வாலிப வயதில் உணரலாம்.
- கணவனின் மாற்றத்தை மனைவி நோய்வாய்ப்படுதலில் உணரலாம்.
- மனைவியின் மாற்றத்தை கணவனின் வறுமையில் உணரலாம்.
- நண்பனின் மாற்றத்தை கஷ்ட காலத்தில் உணரலாம்.




- சகோதரனின் மாற்றத்தை சண்டையில் உணரலாம்.
- சகோதரியின் மாற்றத்தை சொத்து பரிமாற்றத்தில் உணரலாம்.
- பிள்ளைகளின் மாற்றத்தை நமது முதுமை காலத்தில் உணரலாம்.

# ஜெபிக்க சில குறிப்புகள்

## திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.

2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.

3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.

5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.

2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.

3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.

4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.

5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.

2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.

3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.

5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. புதிதாக தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் மத சார்பின்மையோடு சிறப்பாக ஆட்சிபுரிய ஜெபிப்போம்.

2. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.

3. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.

4. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.

5. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.

2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.

3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.

4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.

5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

# சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ் மற்றும உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இறைவேண்டல் குறிப்புகள்:-**

1. **"ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மேன்மைப்படுத்துவாய். சங். 50:15"** கஷ்ட நோய்ப்படுக்கையில் விடுதலைக்காய் கர்த்தரை நோக்கி மன்றாடும் ஒவ்வொரு இறைமக்களுக்காக இறைவேண்டல் புரிவோம். கோவிட்-19 நோய் அறிகுறியால் தனிமைப்படுத்தப்பட்டு உணவு பராமரிப்பு இல்லாமல் அழுது கொண்டிருக்கும் மக்களை அரசும், திருச்சபைகளும் அடையாளம் கண்டு ஆதரவு தரும்படியாய் இறைவேண்டல் புரிவோம். மிக விரைவாக மருந்து அனைத்து மக்களுக்கும் தரப்பட்டு நோய்தொற்று முற்றிலும் நீங்கும்படியாய் மரணத்தின் பிடியிலிருந்து மக்கள் காக்கப்படும்படியாய் இறைவேண்டல் புரிவோம்.
2. கோவிட்-19 என்னும் கொடும் நோய் கண்டு அஞ்சாமல் தங்கள் பணிகளை உண்மையாய் நிறைவேற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ உதவியாளவர்கள், சுகாதர துறை ஊழியர்கள், தூய்மை பணியாளர்கள், காவல்துறையினர் மற்றும் இப்பணியில் நேரிடையாக தங்களை இணைத்துள்ள அனைத்து ஊழியர்களுக்காகவும் இறைவேண்டல் புரிவோம்.
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
4. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....

குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்!** **இனிய வாழ்வு பெறுவோம்!!**

# அனுதின மன்னா – செப்டம்பர் 2021

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| செப். 1 | புதன் | ஆதி. 9:8-17 | ஆதி. 9:10 | எசேக். 34-36 |
| செப். 2 | வியாழன் | சங். 147:1-11 | சங். 147:2 | எசேக். 37-39 |
| **செப் 3** | **வெள்ளி** | **மாற். 10:1-12** | **மாற். 10:8** | **எசேக். 40-42** |
| செப். 4 | சனி | லூக். 4:31-37 | லூக். 4:32 | எசேக். 43-45 |
| செப். 5 | ஞாயிறு | நீதி. 4:1-9 | நீதி. 4:2 | எசேக். 46-48 |
| செப். 6 | திங்கள் | யாத். 19:1-6 | யாத். 19:5 | தானி. 1-2 |
| செப். 7 | செவ்வாய் | எபேசி. 2:11-18 | எபேசி. 2:14 | தானி. 3-4 |
| செப். 8 | புதன் | மத். 5:21-26 | மத். 5:25 | தானி. 5-6 |
| செப். 9 | வியாழன் | யோவா. 1:1-13 | யோவா. 1:12 | தானி. 7-9 |
| **செப். 10** | **வெள்ளி** | **எசே. 37:15-28** | **எசே. 37:22a** | **தானி. 10-12** |
| செப். 11 | சனி | யோவா. 17:20-26 | யோவா. 17:22 | ஓசியா 1-4 |
| செப். 12 | ஞாயிறு | யாத். 2:15-22 | யாத். 2:21 | ஓசியா 5-9 |
| செப். 13 | திங்கள் | ஆதி. 26:17-25 | ஆதி. 26:22 | ஓசியா 10-14 |
| செப். 14 | செவ்வாய் | ஆதி. 13:1-9 | ஆதி. 13:9 | யோவேல் 1-3 |
| செப். 15 | புதன் | பிரசங்கி 7:7-14 | பிரசங்கி 7:9 | ஆமோஸ் 1-3 |
| செப். 16 | வியாழன் | ஆதி. 45:1-15 | ஆதி. 45:5 | ஆமோஸ் 4-6 |
| **செப். 17** | **வெள்ளி** | **ஆதி. 33:1-11** | **ஆதி. 33:4** | **ஆமோஸ் 7-9** |
| செப். 18 | சனி | ஆதி. 31:43-54 | ஆதி. 31:44 | ஒபதியா |
| செப். 19 | ஞாயிறு | சகரியா 8:12-17 | சகரியா 8:17 | யோனா 1-4 |
| செப். 20 | திங்கள் | ஏசாயா 54:1-10 | ஏசாயா 54:10 | மீகா 1-4 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| செப். 21 | செவ்வாய் | மத். 5:1-10 | மத். 5:9 | மீகா 5-7 |
| செப். 22 | புதன் | ரோமர் 5:1-10 | ரோமர் 5:8 | நாகூம் 1-3 |
| செப். 23 | வியாழன் | 1பேதுரு 3:8-18 | 1பேதுரு 3:11 | ஆபகூக் 1-3 |
| **செப். 24** | **வெள்ளி** | **எபி. 12:1-12** | **எபி. 12:11** | **செப். 1-3** |
| செப். 25 | சனி | கொலோ. 3:12-17 | கொலோ.3:15 | ஆகாய் 1-2 |
| செப். 26 | ஞாயிறு | 2தீமோ. 1:1-7 | தீமோ. 1:7 | சகரியா 1-6 |
| செப். 27 | திங்கள் | சங். 66:1-7 | சங். 66:6 | சகரியா 7-10 |
| செப். 28 | செவ்வாய் | எபே. 1:11-23 | எபே. 1:13 | சகரியா 11-14 |
| செப். 29 | புதன் | கலா. 3:26-29 | கலா. 3:27 | மல்கியா 1-4 |
| செப். 20 | வியாழன் | நெகே. 2:17-20 | நெகே. 2:18b | மத்தேயு 1-4 |
| **அக். 1** | **வெள்ளி** | **ஏசாயா 61:1-7** | **ஏசாயா 61:1b** | **மத்தேயு 5-7** |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ செப்டம்பர் 2021

| | | |
|---|---|---|
| 03-09-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sarah Raja Singh |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jino Retna Kumar |
| 10-09-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sathiya Priya Ramesh |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Johan Pratheep |
| 17-09-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Selva Angel Mohan Babu |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Johnson Raj |
| 24-09-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sheeba Sujith |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. John Jacob |
| 01-10-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sujatha Shalini Jino |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Kasi Raja |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்

**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**

**(For Private Circulation Only)**